**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 3**

**இறுதிப் பரீட்சை - 2020/2021 (நிகழ்நிலை)**

**LWU 1202/ LLU 3502- ஒப்புரவுக் கொள்கைகள்**

**காலம் – 03 மணித்தியாலயங்கள்**

---

**சமர்ப்பிப்புத் திகதி : 15 செப்டெம்பர் 2021** **நேரம் : பி.ப. 1.00 – பி.ப 4.00**

---

**பகுதி 01 இலிருந்து ஒரு வினாவையும் பகுதி 02 இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**

**தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

## பகுதி 01 – ஒப்புரவுக் கொள்கைகள்

**இப் பகுதியிலிருந்து ஒரு (1) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**

**01.** 1873 மற்றும் 1875 ஆம் ஆண்டுகளின் நீதியியற் சட்டங்களானவை நீதிமன்றங்களினை இணைத்து பொதுச்சட்டம் மற்றும் ஒப்புரவு ஆகிய இரண்டையும் நீதித்துறைக்கான உச்ச நீதிமன்றமொன்றினால் நிர்வகிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டன. பொதுச்சட்டம் மற்றும் ஒப்புரவு ஆகிய இரண்டின் இணைவு தொடர்பிலான சர்ச்சைகள் அப்போதிலிருந்தே தோன்றத் தொடங்கின.

நீதியியற் சட்டங்களின் அறிமுகத்திற்கு முன்னரும் பின்னருமான ஆங்கிலச்சட்டத்தில ஒப்புரவின் விருத்தியினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

**02**. (அ) ஒப்புரவு மூதுரைகளுக்கு ஒப்புரவின் விருத்தியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கு உள்ளது. பின்வரும் வழக்குகளின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை விமர்சனரீதியாக மதிப்பிடுக.

*(i)Jones v. Maynard* 1951 Ch. 672

*(ii)Overton v. Banister* 1844 3 Hare 503

*(iii)Penn v. Lord Baltimore* 1750 1 Ves. Sen. 444

(05×03 = 15 புள்ளிகள்)

(ஆ) ஒப்புரவு மூதுரைகளின் தற்கால செல்வாக்கினை விளக்குக.

(10 புள்ளிகள் )

**பகுதி 02- நம்பிக்கைகள் சட்டம்**

**இப் பகுதியிலிருந்து மூன்று (3) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**

**03.**

(அ)அப்பிரிவினைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு எந்தவொரு நியாயப்படுத்தலும் இல்லாமையினால் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இனை நீக்குவதற்கு குழுவொன்று பரிந்துரைத்துள்ளது.

இப் பரிந்துரையுடன் நீா் இணங்குகின்றீரா?

உமது விடைக்கான காரணங்களைத் தருக. பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றை மேற்கோள்காட்டி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(18 புள்ளிகள்)

(ஆ) தனது மூதாதையா் சொத்தினை தலைமுறையொன்றிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கு சமன் என்பவன் விரும்புகின்றான். அவ்வாறாக தலைமுறையொன்றிலிருந்து அடுத்த தலைமுறைக்கு சொத்து செல்லும் என்ற நெறிவுறுத்தலுடன் அவன் நம்பிக்கையொன்றினை உருவாக்குகின்றான்.

சமனினால் வலிதான நம்பிக்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதனை ஆராய்க.

(07 புள்ளிகள்)

**04.** கீழ்வரும் சந்தர்ப்பங்களில் ஆக்க நம்பிக்கைகள் ஆக்கப்பட்டுள்ளனவா என பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றின் பின்னணியில் ஆராய்க.

(அ) கடனை நேரத்திற்கு செலுத்த தவறியமையினால் 'துருணு தரு' என்ற வங்கியானது கவிந்து என்பவனுக்கு எதிராக வழக்கொன்றினைத் தாக்கல் செய்தது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த போது, டோம்பேயில் இறப்பர் தோட்டமொன்றை கொள்வனவு செய்த கவிந்து அவனுடைய சகோதரியான கவிஷாவின் பெயரில் அதனைப் பதிவு செய்தான். நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வந்த பின்னர் அக் குறித்த இறப்பர் தோட்டம் மீளவும் கைமாற்றப்படும் என கவிந்து மற்றும் கவிஷாவிற்கிடையில் உடன்படிக்கையொன்று காணப்பட்டது. எனினும், வழக்கு நடைபெறுகையில் அவனது கொடுப்பனவை செலுத்தியமையினால் வங்கியினால் வழக்கு மீளப் பெறப்பட்டது. கவிந்துவிற்கு இறப்பர் தோட்டத்தினை மீள கைமாற்றுவதற்கு கவிஷா மறுக்கின்றாள்.

(12.5 புள்ளிகள்)

(ஆ) நீதா என்பவளும் மதுக என்பவனும் பியகமையிலுள்ள வியாபாரமொன்றின் பங்குதாரர்களாவார்கள். பல வியாபாரங்களை சொந்தமாகக் கொண்டுள்ள நீதா தன்னுடைய தனிப்பட்ட வியாபாரத்தில் ஓய்வற்று ஈடுபட்டாள். எனவே, பங்குடமை வியாபாரத்தின் முகாமையிலிருந்து விலகியதுடன் அதன் நிதியினை மதுகவிடமே விடுகின்றாள். நீதாவிற்கு அறிவிக்காமல் பங்குடமையின் பணத்தினைப் பயன்படுத்தி மதுகவின் பெயரில் ஹோட்டலொன்றினை மதுக வாங்குகின்றான். இக் கொள்வனவு தொடர்பில் தெரிந்து கொண்ட நீதா பங்குடமையின் பெயரில் ஹோட்டலினை கைமாற்றுமாறு மதுகவினை கோருகின்றாள்.

(12.5 புள்ளிகள்)

**05.** மிஹிரியின் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் ஆதனக் கையளிப்புக்கள் வலிதான தர்ம நம்பிக்கையொன்றினை ஆக்குகின்னவா என்பதனை நம்பிக்கைகள் கட்டளைச்சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளின் பின்னணியில் ஆராய்க.

(அ) மன்னாரில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்களின் நன்மைக்காக மன்னாரின் கரையோர பிரதேசத்தினையொட்டி ஓய்வு அறைகள் மற்றும் களஞ்சிய அறைகள் என்பவற்றைப் பராமரிப்பதற்காக மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கம் என்பதற்கு ரூபா 02 மில்லியன்.

(ஆ) பாடசாலை பிள்ளைகளுக்கிடையில் மனிதவுரிமைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக மனிதவுரிமைகள் கற்கை வட்டத்தினை உருவாக்குவாற்காக சட்டத்தரணிகள் சங்கத்திற்கு ரூபா 02 மில்லியன்.

(இ) தெரு நாய்களுக்கு கூடுகளை கட்டுவதற்காக 'விலங்கு உரிமைகள் சங்கத்திற்கு' ரூபா 50,000.

(ஈ) உள்வாரி மாணவர்களின் நன்மைக்காக தியான வகுப்புக்களை நடாத்துவதற்காகாவும் திணைக்களத்தில் ஆண்டு தோறும் தானம் வழங்குவதற்கும் சட்டக் கற்கைகள் திணைக்களத்திற்கு ரூபா 03 மில்லியன்.

(உ) அவர்களின் பிறந்த தினத்தின் போது தனது கிராமத்தவர்களுக்கு அன்பளிப்புக்களை விநியோகிப்பதற்காக தனது கணவனுக்கு ரூபா 04 மில்லியன்.

(05×05 = 25 புள்ளிகள்)

**06.** ருவான் என்பவன் செல்வந்த முயற்சியாண்மையொருவராவான். அவன் தன்னுடைய இறுதிவிருப்பாவணத்தின் மூலம் அவனுடைய இரு மகன்மாரான விகன்ஹா மற்றும் மஞ்சுல என்பவர்களுக்காக தேயிலைத் தோட்டமொன்று, ஆடம்பர ஹோட்டலொன்று மற்றும் ரூபா 50 மில்லியன் என்பவற்றை விட்டுச் செல்கின்றான். அவனுடைய நண்பியான சசினி என்பவள் நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்டாள். ருவானின் மரணத்தின் பின்னர் ஆடம்பர ஹோட்டலினை 05 வருட குத்தகைக்கு அவளது நண்பனான சரத் என்பவனுக்கு சசினி கொடுத்ததுடன் குத்தகைப் பணத்தினை தன்னுடைய சொந்த வங்கிக் கணக்கில் தன்னுடைய சொந்த பாவனைக்காக வைப்புச் செய்யுமாறும் அவனை அவள் கோரினாள். தேயிலைத் தோட்டத்திலிருந்தான வருமானத்தின் 60% இனை அவள் ருவானின் மகன்மாரிடையே சமமாக பகிர்ந்ததுடன் மிகுதியினை நம்பிக்கையாளரொருவராக அவளின் சேவைக்கான ஊதியமாக தன்னிடத்தே வைத்துக் கொண்டாள். தான் முதிர்ச்சிசார் வயதினை அடைந்து விட்டதாகக் கூறி ருவானின் சேமிப்பு வைப்பிலிருந்து தன்னுடைய பங்கினை விகங்க கோரினான். மஞ்சுல இன்னும் சிற்றகவேயரொருவனாக இருக்கின்றான் எனக் கூறி சசினி அக்கோரிக்கையினை மறுக்கின்றான். ருவானின் ஆதனக் கணக்குகளினை சரிபார்க்க தன்னை அனுமதிக்க வேண்டும் என்ற விகங்கவின் கோரிக்கையினையும் சசினி நிராகரித்தாள். தேயிலைத் தோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட 25 பேர்ச் துண்டொன்றினை அவளது நண்பனான விமலுக்கு விற்றதுடன் தன்னுடைய சொந்த பயன்பாட்டிற்காக அப் பணத்தினை தன்னுடைய கணக்கில் சசினி வைப்புச் செய்தாள். சில ஆண்டுகளுக்குப் பின்னர், ருவானினி சேமிப்பு வைப்புக் கணக்கிலிருந்த ரூபா 10 மில்லியனை பயன்படுத்தி ஆடைத் தொழிற்சாலையொன்றை சசினி ஆரம்பித்தாள்.

மேற்போந்த நிகழ்விலுள்ள பிரச்சினைகளின் பின்னணியில் கட்சிக்காரர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை ஆராய்க. நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கோள்காட்டுவதன் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

*****